Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in


# தலைவர்/கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்

## மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

அரசு பல்துறை கட்டிட வளாகம் , இரண்டாம் தளம், காஜாமலை (மன்னார்புரம் அருகில்), திருச்சிராப்பள்ளி 620 020.

விளம்பர எண் 1 / 2017/மா.ஆ.சேநி நாள்: 25.11.2017

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளுக்கு விற்பனையாளர்கள் (Sales Person) மற்றும் கட்டுநர்கள் (Packer) தேர்வுக்கான விளம்பரம்.**

1) கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் 18.12.2017 அன்று திங்கள்கிழமை மாலை 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் வகைகள் | காலிப்பணியிட எண்ணிக்கை விவரம். | |
|---|---|---|---|---|---|
| | | | | விற்பனையாளர் | கட்டுநர் |
| 1 | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Sales Person) | 1) தொகுப்பு ஊதியம் ரூ.5000/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2) ஓராண்டுக்குப் பின் ஊதிய விகிதம் ரூ.4300 - 12000 | 1.கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் | 09 | 02 |
| | | | 2.வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள். | 0 | 06 |
| | கட்டுநர் (Packer) | 1) தொகுப்பு ஊதியம் ரூ.4250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2) ஓராண்டுக்குப்பின் ஊதிய விகிதம் ரூ.3900 - 11000 | 3. தொடக்கக் கூட்டுறவு பண்டக சாலைகள் | 10 | 6 |
| | | | 4. தொடக்கக் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 167 | 2 |
| | | | 5. இதர வகை சங்கங்கள் (LAMP) | 1 | 0 |
| | | | கூடுதல் | 187 | 16 |

குறிப்பு: மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் (Estimated Vacancy) எண்ணிக்கை தற்காலிகமானது ( Tentative) மாற்றத்திற்கும் சேர்த்தலுக்கும் உட்பட்டது

**2) நிபந்தனைகள்:-**

1) மேற்படி பதவிக்கான நேரடி நியமனத்தின்போது அரசுப் பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொது போட்டி | பிற்படுத்தப் பட்டோர் (OBCM) | பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) BC(M) | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (சீர்மரபினர்) (MBC) | ஆதி திராவிடர் (SC) | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) SC(A) | பழங்குடியினர் ST |
| **விற்பனையாளர்** | 187 | 58 (PSTM -10) (W-18) (DW-1) (Ex.S-3) | 51 (PSTM -10) (W-15) (Ex.S-3) | 6 (W-2) | 37 (PSTM- 6) (W-11) (DW-1) (Ex.S-2) | 28 (PSTM-5) (W-9) (DW-1) (Ex.S-1) | 6 (PSTM- 3) (W-1) | 1 |
| **கட்டுநர்** | 16 | 5 (PSTM -1) (W-1) (Ex.S-1) | 1 (PSTM -1) (W-1) | 1 | 3 (W-1) | 2 (W-1) | 1 | 0 |

w- Women, DW - Sestitute Widow, Ex.S- Ex.Serviceman, PSTM - Persons Studied in Tamil Medium,

1) நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.
2) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின் போதும் பின்பற்றப்படும். தமிழ்வழி கல்வி பயின்றோர் என்போர் இப்பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியை தமிழ்வழி (Tamil Medium) படித்தோராவர்.
3) பார்வைத்திறனற்ற நபர்கள் நியாயவிலைக் கடை விற்பனையாளர் பணி இடங்களுக்கு விண்ணப்பிக்க இயலாது.
4) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல் முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். அதற்குப்பின் பெறப்படும் முறையீடுகள் எதுவும் ஏற்கப்படமாட்டாது.

**3. முக்கிய தேதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| அ) | விளம்பர அறிவிக்கை நாள் | - | 25.11.2017 |
| ஆ) | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதற்கான கடைசி நாள் | - | 18.12.2017 மாலை 5.45 மணி வரை |

**4. தகுதிகள்:-**

அ. வயது (01.01.2017 அன்று)

1. விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 01.01.1999 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க ரேண்டும்)

2. விண்ணப்பதாரர்கள் 01.01.2017 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| வ. எண் | வகுப்பினர் | வயது வரம்பு |
|---|---|---|
| i) | ஆதிதிராவிடர் வகுப்பினர் (ஆ.தி), ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) ஆ.தி (அ), பழங்குடி வகுப்பினர் (ப.வ), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (மி.பி.வ/ சீ.ம) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாதோர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | அதிகபட்ச வயது வரம்பு இல்லை |
| ii) | ஏனையோர் (Others) - அதாவது ஆ.தி., ஆ.தி(அ), ப.வ., மி.பி.வ/சீ.ம, பி.வ.(மு.அ) மற்றும் | 30 வயது ** |


Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in

Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in


பி.வ (மு), ஆகிய வகுப்பினரைச் சாராதோர்.

** குறிப்பு:-

1) அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைக்கு (Destitute Widow) அதிகபட்ச வயது வரம்பு இல்லை.
2) ஆ.தி, ஆ.தி(அ), ப.வ, மி.பி.வ/சீ.ம, பி.வ.(மு.அ) மற்றும் பி.வ.(மு) ஆகிய வகுப்பினர் சாராத ''ஏனையோர்'' வகுப்பு சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்குமேல் 10 ஆண்டு வரை வயது வரம்புச் சலுகைப்பெற தகுதியுடையவராவார்.
3) ஆ.தி, ஆ.தி(அ), ப.வ., மி.பி.வ/சீ.ம., பி.வ.(மு.அ) மற்றும் பி.வ.(மு) ஆகிய வகுப்பினர் சாராத ''ஏனையோர்'' வகுப்பு சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் 48 வயது வரை வயது வரம்புச் சலுகைப் பெற தகுதியுடையவர் ஆவார்.
4) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு/ பணி / பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3(i) (vii)

**ஆ. கல்வித் தகுதிகள்:-**

**1. நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் : பன்னிரெண்டாம் வகுப்புத்தேர்ச்சி (+2 தேர்ச்சி) அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதி.**

**2. நியாய விலைக் கடை கட்டுநர்கள் : பத்தாம் வகுப்புத் தேர்ச்சி.**

**5) தமிழ் மொழித் திறன்:**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுத மற்றும் படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும். தமிழ்நாடு மாநில ஆட்சி மொழியான தமிழில் போதுமான அறிவு (Adequate Knowledge) உடையவர் என்பதற்கு விண்ணப்பிக்கும் பணிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியை தமிழ்வழி கல்வியிலோ அல்லது தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்து தேர்ச்சி பெற்றதற்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

**6)உடற்தகுதி சான்றிதழ்:**

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**7) தெரிவு முறை:**

மேற்படி காலிப்பணியிடங்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகிய அனைத்திற்கும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடத்திற்கான நபர்கள், நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில், வகுப்பு வாரி சுழற்சிக்கு உட்பட்டும், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு கட்டாயமாக வருகை புரிய வேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது நேர்முக தேர்விற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

**8)காலிப்பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்:**

விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக்கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை உரிய விண்ணப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது. இதற்கென தனியாக கலந்தாய்வு (Counselling) ஏதும் நடைபெறாது.

**9)விண்ணப்பங்கள் விநியோகித்தல்:**

மேற்படி நியாயவிலைக்கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணி நியமனங்களுக்கான விண்ணப்பப்படிவத்தை கீழ்க்கண்ட அலுவலகங்களில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

1) துணைப்பதிவாளர் / பொதுவிநியோகத்திட்ட அலுவலகம் அரசு பல்துறை கட்டிடம், இரண்டாம் தளம், திருச்சிராப்பள்ளி– 620 020.
2) திருச்சிராப்பள்ளி (சிந்தாமணி) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை தலைமையிடம், புத்தூர், திருச்சிராப்பள்ளி 620 017.
3) திருவானைக்கோவில் கூட்டுறவு பண்டக சாலை, 46, மேல விபூதி பிரகாரம், திருவானைக்கோவில், திருச்சிராப்பள்ளி 620 005.
4) இலால்குடி சிவஞானம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மெயின்ரோடு, சிறுதையூர், இலால்குடி.
5) முசிறி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், 7/D, அரசு கலைக்கல்லூரி சாலை, முசிறி 621 211
6) துறையூர் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், 12, மலையப்பன் சாலை, துறையூர் 621 010
7) மணப்பாறை நகர கூட்டுறவு வங்கி (அக்ரஹாரம்) மாரியம்மன் கோவில் அருகில், மணப்பாறை.
8) மண்ணச்சநல்லூர் பிரதம கூட்டுறவு பண்டகசாலை மெயின்ரோடு, மண்ணச்சநல்லூர்.
9) ஸ்ரீரெங்கநாதா பிரதம கூட்டுறவு பண்டகசாலை 3வது சன்னதி தெரு, ஸ்ரீரங்கம்.
10)திருச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச்சங்கம் நெ.7, விவேகானந்தா நகர், இராமலிங்க நகர், உறையூர், திருச்சி–3.

**10)விண்ணப்ப கட்டணம்:**

நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்ப பதிவுக் கட்டணம் ரூ.150/–ம் கட்டுநர் நியமனத்திற்கான விண்ணப்ப பதிவு கட்டணம் ரூ.100/– ம் செலுத்தப்பட வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் (SC & ST) மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் இந்த விண்ணப்ப பதிவுக் கட்டணம் செலுத்த தேவையில்லை. மேற்படி கட்டணம் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் (District Recruitment Bureau) பெயரில் வரைவோலையாக திருச்சிராப்பள்ளியில் மாற்றத்தக்க வகையில் (payable at Trichirappalli) எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும் விண்ணப்ப படிவத்தின் எண் மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவற்றை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும். வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

**11)விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:**

விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்படிவத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. சான்றிதழ்களின் ஒளியச்சு நகல்கள் இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**12) நேர்முகத்தேர்வு:**

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள், அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள அஞ்சல் முகவரிக்கு அஞ்சல் அனுப்பப்படும். நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகலுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும், கோர இயலாது.

**13)தடையில்லா சான்றிதழ்:**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

**14) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்:**

1) விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2) விண்ணப்ப படிவங்கள் பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3) விண்ணப்பப் படிவத்தில் அனைத்து காலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4) விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக்கட்டணத்திற்கான வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.
5) விண்ணப்பதாரர் அவரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்தில் ஒட்டுவதுடன் தனி ஒரு புகைப்படத்தினை இணைக்க வேண்டும். மேலும் சுய முகவரியிட்ட ரூபாய் 25/–க்கான தபால் வில்லை ஒட்டிய 24 x 10 செ.மீ உறையினையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

**15)பொது விவரங்கள்:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமோ **தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் அரசு பல்துறை கட்டிட வளாகம், இரண்டாம் தளம் காஜாமலை (மன்னார்புரம் அருகில்) திருச்சிராப்பள்ளி 620 020** என்ற முகவரிக்கு 18.12.2017ந் தேதி மாலை 5.45க்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. அத்துடன் அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பு ஏற்காது.


Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in

Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in


தலைவர்/ கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்,
கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம் / மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.


Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in